DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.3

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.செல்லம்மாள் | Caste: |
| Husband's Name | : மாரிச்சாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

09.01.2026 – 12.05 PM

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். ஆனால் அப்போது என்னை விசாரிக்கவில்லை. பின்னர் மறுநாள் வந்து என்னை விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்தபோது எனது கணவர் மாரிச்சாமி எனது வீட்டருகே குடியிருக்கும் எனது உறவினர்களான பெத்தம்மாள், நாராயணன் ஆகியோர்கள் இருந்தார்கள். ஒரு போலீசார் என்னை விசாரிக்க மற்றொரு போலீசார் எனது வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார். அவ்வாறு எழுதிவிட்டு என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது.

2. வழக்கு சம்மந்தமாக எனது நாத்தனார் பால்ராணி என்பவர் தான் புகார் அளித்தார். பால்ராணி அளித்த புகாரில் என்னென்ன விபரங்கள் அடங்கியிருந்தன என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏனென்றால் எனக்கு படிக்க தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவ சமயத்தில் நான் ஆடு மேய்க்க சென்றிருந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை மறுவிசாரணை எதுவும் செய்யவில்லை. போலீசார் என்னை

விசாரித்தபோது பிரச்சனைக்குரிய சொத்தானது எனது நாத்தனார் பால்ராணிக்கு சொந்தமானது என்பதற்கு ஆதரவாக பட்டாவை போலீசாரிடம் காண்பித்தோம்.

3. பிரச்சனைக்குரிய சொத்தானது எனது நாத்தனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் விதமாக தற்போது வரையில் உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள நான்காவது சாட்சியான முத்துக்குமார் எனக்கு மகன் உறவு முறை வேண்டும். அ.சா.4 முத்துக்கருப்பன், சாட்சிப் பட்டியலில் உள்ள 7 வது சாட்சியான நாராயணன் என்பவர்கள் எனது கணவருடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் கருப்பசாமி மகன் சங்கிலிமுருகன், முனியாண்டி மகன் முனியசாமி, பாலமுருகன் ஆகியோர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

4. எனது வீடானது காலனிக்கு செல்லும் இடத்திற்கு தெற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். எனது வீடு ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்டதாகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், எனக்கு சம்பவம் குறித்தும், பிரச்சனைக்குரிய சொத்து குறித்தும் எதுவுமே தெரியாமல் எனது நாத்தனாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.01.09 16:32:36 +0530